# ஓரடி வைக்கு முன் ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!



**எங்களில் எத்தனை மரணங்கள், அங்கவீனங்கள்**

**அத்தனையும் தடுக்க சில ஆலோசனைகள்**

unicef

2. வீட்டு வாசல், வீட்டு வளவு
3. கிணற்றடி
4. மரங்களின் கீழ் (தென்னை, எலுமிச்சை, மா போன்றவை.)
5. வீதி ஓரங்கள்
6. தோட்டம், வயற் பகுதிகள்
7. யுத்தம் நடந்த பிரதேசங்கள்

அத்துடன் மழை காலங்களில் மழை நீரினால் மிதிவெடிகள் வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படலாம் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

## மிதிவெடி அனர்த்தங்களில் இருந்து உங்களைப் பாதுகாக்கும் வழிகள்

1. புதிய இடங்களுக்கு அவசரப்பட்டுச் செல்லாதீர்கள்.
2. முன்னர் எவராவது பாவித்த பாதையைப் பயன்படுத்துங்கள். அவசரத்திற்கேனும் **குறுக்கு வழிகளைப்** பயன்படுத்தாதீர்கள்.
3. **உங்கள் பிள்ளைகளுக்கு**
   - மிதிவெடி அபாயம் பற்றி எச்சரியுங்கள்.
   - மிதிவெடி உள்ளதென நீங்கள் சந்தேகிக்கும் பகுதிகளில் **தனியே செல்ல, விளையாட** அனுமதியாதீர்கள்.
   - முன்பு கண்டிராத பொருள்களைக் கண்டால் அவற்றைத் **தொடவோ, கையாளவோ** வேண்டாம் எனவும் அவை பற்றி உங்களுக்கு உடனடியாக அறிவிக்கும்படியும் கூறி வையுங்கள்.
4. மிதிவெடி அல்லது வெடிப்பொருள்களைக் கண்டால் அவ்விடத்தை அடையாளமிட்ட பின் **வந்த வழியே** திரும்புங்கள்.
5. உடனடியாக அப்பகுதி கிராம அலுவலர், பெரியோர் மூலம் உரிய நடவடிக்கை எடுத்து மற்றவர்களையும் அபாயத்திலிருந்து காப்பாற்றுங்கள்.
6. மிதிவெடி அபாயம் பற்றி எச்சரிக்கும் எச்சரிக்கைப் பலகைகளை **அலட்சியம் செய்யாதீர்கள்**.



## மிதிவெடி, வெடிபொருள்களினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட அண்மைய பாதிப்புகள்

- மாதமொன்றிற்கு சராசரி 8 - 10 பேர் காயப்படுகிறார்கள்.
- வருடம் ஒன்றிற்கு 10 பேர் இறக்கிறார்கள்.
- பெரும்பாலான மிதிவெடி காயங்கள் கைவிடப்பட்ட காவலரண்களைச் சுற்றியே ஏற்படுகின்றன.
- இவற்றில் 25 வீதமானோர் 20 வயதிற்குக் குறைந்தவர்கள். 70 வீதமானோர் 20 - 60 வயதிற்கு இடைப்பட்டவர்கள்.
- பாதிக்கப்பட்ட பிள்ளைகளில் 55 வீதம் மிதிவெடி, வெடிக்கும் பொருள்களைக் கையாள்வதால் காயப்பட்டவர்கள்.
- பாதிக்கப்பட்டவர்களில் வலிகாமம் பகுதியில் மட்டும் 60 வீதத்தினர் உள்ளனர்.



ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையின்
சுகாதார கல்விசார் பொருள்கள் தயாரிப்பு அலகினால்
தயாரிக்கப்பட்டது.
1998

# எச்சரிக்கை! மிதிவெடி அபாயம்

முழுமையாக அல்லது பகுதியாக நிலத்தில் புதைக்கப்பட்டு, மிதிக்கும் போது அல்லது கையாளும் போது வெடிக்கும் பொருள்கள் **மிதிவெடிகள்** எனப்படும்.

- **இவை பல வடிவங்களில், பல இடங்களில்** புதைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்.



மிதிவெடி



ஜொனிவெடி

- இவை புதைத்து பல வருடங்களின் பின்னரும் வெடிக்கும்.
- எப்பொழுதும் மிதிவெடிகள் கூட்டமாகவே புதைக்கப்பட்டு இருக்கும்.
- மிதிவெடிகள் தவிர்ந்த வேறு வெடி பொருள்களும் உண்டு. அவை கவனக் குறைவாகக் கையாளும் போது வெடித்து, பலரை அங்கவீனராக்கவோ அல்லது உயிரிழக்கவோ செய்பவை.
  அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்.

கைக்குண்டு



எறிகணை




## மிதிவெடிகள், வெடிபொருள்கள் காணப்படும் இடங்கள்

1. **கைவிடப்பட்ட**
   - காவலரண்கள் ( சென்றி )
   - இராணுவ முகாம்கள்
   - பாதுகாப்பரண்கள் ( பண்ட் )
   - பதுங்கு குழிகள் ( பங்கர் )